மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன கோரிக்கை அது?*

திரு. ம. கலை அரசு: *சாலை வழியாக செல்கின்ற வாகனங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற கட்டணம் குறித்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்னுடைய ஆய்வில் உள்ளது. அமருங்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட* Toll gate *சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுவும் என்னுடைய ஆய்வில் உள்ளது.*

(இ) அரசிதழில் பெயர் மாற்ற அறிவிப்பு வெளியிட்டபின், மாற்றம் செய்யப்பட்ட பெயரில் +1, +2 மாணவர்களுக்கு புதிய சான்றிதழ் வழங்குதல்

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய யாராவது ஒரு மனிதர் தன்னுடைய பெயரை மாற்றம் செய்து* Gazette*–ல் அறிவிக்கப்பட்டதற்கு பின்னால், பல்கலைக்கழகங்களில் அவருடைய பெயர் மாற்றம் செய்யப்பட்டு புதிய சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால், பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக ப்ளஸ் 1, ப்ளஸ் 2,* 10th *படிக்கக்கூடிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறை இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் வேறு எந்தவிதமான வேலைக்கோ அல்லது படிப்புக்கோ செல்ல முடியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்ட புதிய சான்றிதழை உடனடியாக வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கருத்தை கல்வித் துறையில் ஆலோசனை செய்து, அதன்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

முற்பகல் 10-05

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுவை அறுவடை தொடங்கியிருக்கிறது. ஆனால், அரசு கொள்முதல் நிலையங்களைப் போதுமான அளவிற்கு திறந்து, நெல்லை கொள்முதல் செய்யாத காரணத்தினாலே மிகக் குறைவான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நெல்லை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறப்பது சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.

(உ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விசைத்தறி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பற்றிச் சொன்னார்கள். அதற்கு பதில் தர இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் அளிக்கலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பிரச்சினையை சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் எழுப்பும் பிரச்சினை அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.